எனது இல: எம்/01/42

சுற்றறிக்கை இல: பதி.நா/11/2006

திகதி: 2006.09.13

**விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களை ஆட்சசேர்ப்பு செய்வதற்கான புதிய நடைமுறைக்கோவையை (2006 ஆண்டு) நடைமுறைப்படுத்தல்.**

ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களைத் ஆட்சசேர்ப்பு செய்வதற்கான புதிய நடைமுறைக்கோவை (2006 ஆம் ஆண்டு), 2006.08.30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது.

02. இந்தப் புதிய நடைமுறைக்கோவை (2006 ஆம் ஆண்டு) நடைமுறைக்கு வருவதைத் தொடர்ந்து, பதிவாளர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோருதல் மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்துதல் போன்ற விடயங்களில் புதிய நடைமுறைக்கோவையின்படி செயல்படுதல் வேண்டும். எனவே, பின்வரும் அறிவுறுத்தல்களின்படி தயவுசெய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்.

1. இதற்காக ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தும், நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படாத பிரிவுகள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துங்கள். இப்பிரிவுகளை மீண்டும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். குறித்த பிரிவுகள் புதிய நடைமுறைக்கோவையின் (2006 ஆம் ஆண்டு) கீழ் மீண்டும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர், அப்பிரிவுகளுக்காக ஏற்கனவே கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களையும் செல்லுபடியாகும் விண்ணப்பங்களாக ஏற்றுக்கொள்ளவும்.
2. ஏற்கனவே நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டிருந்தும், இதுவரை எனக்கு பரிந்துரைகள் அனுப்பி வைக்கப்படாத பிரிவுகளின் நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துங்கள். அந்தப் பிரிவுகளும் மீண்டும் வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். அவற்றுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தொடர்பாகவும் மேலே குறிப்பிட்ட முதலாம் (1) பந்தியின் படி செயல்படவும்.

03. உங்கள் மாவட்டத்தில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் இதுவரை எனக்கு அறிக்கை செய்யப்படாமல் இருப்பின், அவை குறித்து உடனடியாக எனக்கு அறிக்கை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(ஒப்பம்)

பதிவாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு - தகவலுக்காக.
2. அனைத்து வலயங்களுக்குப் பொறுப்பான உதவிப் பதிவாளர் நாயகங்கள்.
3. காணி மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர்கள்